தனி நீதிமன்றம் மாவட்ட நீதிபதி/அமர்வு நீதிபதி அவர்கள் அல்ல

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364137

1. District : மாவட்டம் இராமநாதபுரம் PS: காவல்நிலையம் மு.க.புரம் Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 06/26 Date: நாள் 29.06.2026

2. (i) Act சட்டம்: மோசடி தடுப்பு தொடர்புடைய சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7 [b] of PC Amendment

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act of 2018

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 26.6.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.30 Time to : நேரம் வரை கோனை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.06.2026 Time : நேரம் 10.50

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் பொதுநுழை - 1 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தோராயமாக 21 கி.மீ வடமேற்கு திசையில் முதுகுளத்தூர் இருப்பு, முதுகுளத்தூர் VAO அலுவலகம், இந்திரா நகர்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. வினோத் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திலகபரதன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30/2026 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனியார் நிறுவனம் (g) Address : முகவரி நத்தத்தெரு, முதுகுளத்தூர் அஞ்சல், பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தெ. முக்கூடற்கோனார், முதுகுளத்தூர் VAO, பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் ஏதுமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

சமர்ப்பிக்கிறேன்:- M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 29.06.2026 ஆம் தேதி 10.50 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி T.வினிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா முதலூர் குரூப்பின் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.முத்துக்குமார் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும், புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.06/2026 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 29.06.2026 ஆம் தேதி காலை 11.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் T. வினிதா, வயது 30/2026, த/பெ. திருமுருகன், நடுத்தெரு, முதலூர் அஞ்சல், பரமக்குடி தாலுகா,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

T. vini

29/06/2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29-06-2026

Name: பெயர் M. குமரேசன்
Rank: நிலை ..... No. எண் .....

காவல் ஆய்வாளர்
ஊ.த.க பரிவு
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2026 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 2022 ஆம் ஆண்டு எங்கள் ஊரைச்சேர்ந்த திருமதி.சசிகலா என்பவரிடமிருந்து முதலூர் வருவாய் கிராம சர்வே எண். 206/3A-யில் உள்ள 5 சென்ட் புன்செய் நிலத்தை கிரைய விலைக்கு வாங்கினேன். அதன் பின்னர், எனது பெயருக்கு பட்டா மாற்றம் கேட்டு கடந்த 13.02.2026 அன்று இணைய வழியில் விண்ணப்பித்தேன். அச்சமயம் தேர்தல் நேரமாக இருந்ததால் எனக்கு பட்டா மாறுதல் ஆகவில்லை. தேர்தல் முடிந்த பிறகு முதலூர் குரூப் விஏஓ திரு.முத்துக்குமார் கடந்த 16.05.2026ம் தேதி என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டு சத்திரக்குடியில் உள்ள விஏஓ அலுவலகம் வரச்சொன்னதின்பேரில் அன்றைய தினம் நான் அலுவலகம் சென்று விஏஓ-வை நேரில் சந்தித்து விபரம் கேட்டதற்கு பட்டா பெயர் மாத்தணும்னா பணம் ரூ.5,000/- கொடுங்க அதற்கு உடனே நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் தானாகவே பட்டா பெயர் மாறுதல் ஆகிடும் என்று நினைத்து பணம் எல்லாம் தர முடியாது என்று விஏஓ-விடம் சொல்லி வந்துவிட்டேன். பின்னர் கடந்த 28.05.2026 அன்று விஏஓ அவரது அலைபேசி எண் 8248432929 லிருந்து எனது அலைபேசி எண் 7708846006 க்கு தொடர்பு கொண்டு, என் பெயரில் கடந்த 25.05.2026ம் தேதி பட்டா எண்.1986, சர்வே எண்.206/3A2B-யின் படி பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறி, நான்தான் உங்களுக்கு பட்டா மாற்றத்திற்கு பரிந்துரைத்தேன் எனக்கூறி நான் ஏற்கனவே கேட்ட பணத்தை ரெடி பண்ணி கொடுங்க என கராராக கேட்டார். அதற்கு நான் மிகவும் கஷ்டப்படுகிறேன் என்னால் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். அதன்பின்னர் கடந்த 16.06.2026ம் தேதி விஏஓ எனக்கு மிஸ்டு கால் கொடுத்ததின்பேரில், நான் அவரை தொடர்பு கொண்டு விபரம் கேட்க விஏஓ, பணம் ரூ.5,000/- ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டுக்கொண்டு நான் அனுப்பும் 8940425271 என்ற எண்ணுக்கு ஜீபேயில் ரூ.5,000/- போட்டுவிடும்படி சொன்னார். அதற்கு நான் உடம்பு சரியில்லாத எனது மகனை வைத்து ரொம்ப கஷ்டப்படுகிறேன், பணம் ஏதும் இல்லன்னு சொன்னேன். இந்நிலையில் கடந்த 26.06.2026ம் தேதி மதியம் 01.30 மணியளவில்

மீண்டும் விஏஓ கொடுத்த மிஸ்டு காலை பார்த்து அவரை திரும்ப அலைபேசியில் தொடர்பு கொண்டபோது பட்டாவுக்கு ரூ.5,000/- ஜீபேயில் போடச்சொன்னேன்ல ஏன் இன்னும் போடல என்று கேட்டார். அதற்கு நான் ரொம்ப கஷ்டப்படுறேன் சார் என்று சொன்னதற்கு விஏஓ சரி ரூ.3,000/-த்தையாவது ரெடி பண்ணிட்டு சத்திரக்குடி வந்துட்டு என்கிட்ட போன்ல பேசுங்க எனச்சொன்னார். அதன் பின்பு நான் யோசித்து பார்க்கும் போது எனது நிலைமையை எவ்வளவோ எடுத்து கூறியும் நியாயப்படி செய்ய வேண்டிய அரசு பணியை செய்ததற்கு ரூ.3,000/- இலஞ்சமாக கேட்ட முதலூர் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.முத்துக்குமார் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) T.Vinitha. 29.06.2026. அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 29.06.2026 ஆம் தேதி 10.50 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று வாதி மற்றும் எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து 11.15 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.06/2026 u/s 7 (b) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

29/06/2026.

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.